30.01.2017

தினமணி

**இயற்கை வேளாண்மையை பார்வையிட்ட வெளிநாட்டினர்!**



பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டத்தில், இயற்கை முறையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களை வெளிநாட்டினர் ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டனர்.

குன்னம் வட்டம், ஒகளூர் கிராமத்தில் பொறியாளர் கோகுல், தனக்கு சொந்தமான 4 ஏக்கரில் இயற்கைமுறை பாரம்பரிய நெல் வகைகளான மாப்பிள்ளை சம்பா, ஆத்தூர் கிச்சலி சம்பா, கருடன் சம்பா, சீரக சம்பா, வெள்ளை பொன்னி மற்றும் காய்கறிகள், கீரை வகைகள் சாகுபடி செய்துள்ளார். இந்தப் பயிர்களை, இயற்கை ஆர்வலர்களான பிரான்ஸ் நாட்டை சேர்ந்த பிரான்சிஸ்கோ, ஜப்பானை சேர்ந்த மொமோரோ, மணிப்பூரைச் சேர்ந்த ஃபஞ்சுளா, நேபாளத்தை சேர்ந்த துர்க்கா ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். தொடர்ந்து, கழனிவாசல் கிராமத்தில் விவசாயி பன்னீர்செல்வம், ஒருங்கிணைந்த பண்ணையம் முறையில் வளர்த்து வரும் ஆடு, மாடு, கோழி, மீன், தேனீ மற்றும் சாகுபடி செய்துள்ள பழங்கள், நெல் வகைகளையும், ஒகளூர் கிராமத்தில் விவசாயி சுரேஷ் வயலுக்கு சென்ற அவர்கள், அங்கு இயற்கை முறையில் பராமரிக்கப்பட்டு வரும் நாட்டுக்கோழி, காளான் பண்ணை, கோனேரிப்பாளையம் கிராமத்தில் விவசாயி குமார் சாகுபடி செய்துள்ள முள்ளங்கி, அவரை உள்ளிட்ட பல்வேறு வகையான காய்கறிகளை பார்வையிட்டனர்.

மேலும், தமிழ் பண்பாடு, கலாசாரம், இயற்கை வேளாண்மையின் மகத்துவம் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தனர்.
மேலும், இயற்கை வேளாண்மையை மேம்படுத்தும் வகையில் ஆரோவில் சாகுபடி செய்யவும், தங்களது நாட்டிலும் இயற்கையை சார்ந்து வாழ்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தனர்.

தொடர்ந்து, பெரம்பலூர் நகராட்சி மைதானத்தில் நடைபெற்று வரும் புத்தகக் கண்காட்சியை பார்வையிட்டு, அங்கு நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளை கண்டு ரசித்தனர். இதற்கான ஏற்பாடுகளை இயற்கை வேளாண் வல்லுநர் ஏகாம்பரம் செய்திருந்தார்.

**மலர், காய்கனி கண்காட்சியில் ரூ. 1 கோடிக்கு விற்பனை: அமைச்சர் கமலக்கண்ணன் தகவல்**



புதுச்சேரி தாவரவியல் பூங்காவில் 3 நாள்கள் நடைபெற்ற மலர் மற்றும் காய்கனி கண்காட்சியில் ரூ. ஒரு கோடிக்கு விற்பனை நடைபெற்றுள்ளது. மொத்தம் 4 லட்சம் பேர் கண்காட்சியை பார்வையிட்டனர் என வேளாண் துறை அமைச்சர் ஆர்.கமலக்கண்ணன் தெரிவித்தார்.

வேளாண்மை துறை சார்பில் தாவரவியல் பூங்காவில் அமைக்கப்பட்ட மலர் மற்றும் காய்கனி கண்காட்சியை, முதல்வர் நாராயணசாமி கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கிவைத்தார்.
வேளாண் துறை, கால்நடை துறை, மீன்வளம், வேளாண் அறிவியல் நிலையம், வேளாண் கல்லூரி, விதைச் சான்று மையம், தேசிய தோட்டக்கலை இயக்ககம் மற்றும் சமூக நலத்துறை ஆகிய துறைகளுக்கு தனித் தனியே அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

50 ஆயிரம் மலர்ச் செடிகள்: இங்கு உள்ளூர் மட்டுமன்றி புணே, பெங்களூரு போன்ற வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட 50 ஆயிரம் மலர்ச் செடிகள், புதுச்சேரி வேளாண்துறை மூலம் உற்பத்தி செய்த மலர் செடிகள், போட்டியாளர்களிடம் தருவிக்கப்பட்ட மலர் செடிகள் பொதுமக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

அலைமோதிய மக்கள் கூட்டம்: இந்த நிலையில், இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை கண்காட்சியைக் காண பொதுமக்களின் கூட்டம் அலைமோதியது.

ரூ.1 கோடிக்கு விற்பனை: ஞாயிற்றுக்கிழமை இரவு நிறைவு விழா நடைபெற்றது. வேளாண் அமைச்சர் கமலக்கண்ணன் கண்காட்சியை நிறைவு செய்து பரிசுகள் வழங்கிப் பேசியதாவது:
வேளாண்துறை மூலம் மலர் மற்றும் காய்கனி கண்காட்சி சிறப்பான முறையில் அமைக்கப்பட்டிருந்தது. கண்காட்சியில் ரூ. ஒரு கோடிக்கு வியாபாரம் நடந்துள்ளது. 4 லட்சம் பொதுமக்கள் பார்த்து மகிழ்ந்துள்ளனர். வேளாண்துறை அதிகாரிகள், ஊழியர்கள் ஒரு மாதத்துக்கு முன்பே மலர் கண்காட்சிக்கான ஏற்பாடுகளை தொடங்கி செய்து வந்தனர்.
உதகையில் நடைபெறும் மலர் கண்காட்சி போன்ற தோற்றத்தை உருவாக்கி முடித்துள்ளனர்.

இந்த அறிய முயற்சிக்கு என்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். கண்காட்சியை கூடுதல் நாள்கள் நடத்த முடியாது என்பதால், விவசாயிகள் பயன்பெறும் வகையில் கண்காட்சி மலர்கள், மரக்கன்றுகள், செடிகளின் விற்பனை மேலும் இரண்டு நாள்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. வரும் காலங்களில் கண்காட்சியை கூடுதல் நாள்கள் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
மலர் ராஜா, ராணி, காய்கனி ராஜா, ராணி : மலர் பிரிவில் அதிக புள்ளிகள் பெற்ற அரியாங்குப்பம் ஓடைவெளி பகுதியைச் சேர்ந்த முத்தம்மாளுக்கு மலர் ராணி பட்டமும், காலாப்பட்டு கந்தபிரான் என்பவருக்கு மலர் ராஜா பட்டமும், காய் கனி பிரிவில் பூரணாங்குப்பம் செந்தாமரைக்கு காய்கனி ராணி பட்டமும், சந்தை புதுக்குப்பம் செந்தில்குமாருக்கு காய்கனி ராஜா பட்டமும் அமைச்சர் கமலக்கண்ணன் வழங்கினார். மேலும், 9 பிரிவுகளில் 115 உட்பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு 345 பேருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

**அழிந்து வரும் பாரம்பரிய உணவு தானியம்: உற்பத்தியை ஊக்குவிக்க வலியுறுத்தல்**

நீலகிரியில், அழிந்து வரும் பாரம்பரிய உணவு தானிய உற்பத்தியை அரசு ஊக்குவிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து, பாரம்பரிய உணவு தானிய உற்பத்திக்குழு நிர்வாகி ராஜு பெள்ளி கூறியதாவது:

நீலகிரியில் 1980-களில், லேட் பிளேட் நோய் தாக்கியதால் உருளைக்கிழங்கு சாகுபடி பரப்பளவு குறைந்து, அறுவடை செய்த நிலங்களில் தானியம் விதைப்பதும் குறைந்தது.



நீலகிரியில் உள்ள மலைவாழ் மக்களில் பெரும்பாலானோர், தானிய வகை உணவுகளை மறந்து வருவதால் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீலகிரியில், கடந்த காலங்களில், ராகி, சாமை, கோதுமை, சோளம் போன்ற தானிய உணவுகள் மக்களின் முக்கிய உணவுப் பொருள்களாக இருந்தன. அவற்றை மலைக் காய்கறிகளுடன் ஊடுபயிராக விளைவிப்பதையும் அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மாற்றுப் பயிராகத் தேயிலை விவசாயம் அறிமுகப்படுத்தப்பட்டது. சுதந்திரம் பெற்ற பின்னர், தேயிலை விளைச்சலை அதிகரிக்க மத்திய அரசு இலவசமாக நாற்றுகள் வழங்கியதால் விவசாயிகள் தேயிலை சாகுபடியில் ஆர்வம் கொண்டனர்.

இதன் விளைவாக, நீலகிரியில், தானிய உற்பத்தி கொஞ்சம், கொஞ்சமாகக் குறைந்து தற்போது முற்றிலும் அழியும் சூழல் ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில், ஆண்டுக்கு ஒருமுறை வரும், பண்டிகை, சம்பிரதாயத் தேவைகளுக்குக்கூட தானியங்களை வாங்க இப்பகுதி மக்கள் சமவெளிப் பகுதிகளை நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ரசாயனம் கலந்த உணவு வகைகளை உட்கொள்வதால் பல்வேறு நோய்த் தாக்குதல் ஏற்படுகிறது. கெந்தொரை உள்ளிட்ட சில கிராமங்களில் மட்டும் கோதுமை உள்ளிட்ட சில தானியங்கள் விளைவிக்கப்படுகின்றன. பல

கிராமங்களில் பாரம்பரிய உணவு தானியங்களை உற்பத்தி செய்ய விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். எனினும், அரசு இதைக் கொள்கை முடிவாகக் கொண்டு, விவசாயிகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.